## முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்

வா.சா.1 – இளமதி OS.No.17/2022 நாள் : 21.08.2024

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொர்ச்சி**

தாவா 1 வது அயிட்ட சொத்து என் தகப்பனாருடைய சுய சம்பாதித்ய சொத்து என்பதால் நாங்கள் அனைவரும் பாகம் கேட்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் அசல் வழக்கு எண்.552/1992 என்ற வழக்கில் கிடைக்கப்பெற்ற சொத்து என்பதால் அதில் எங்களுக்கு பாத்தியம் இல்லை. 1ம் பிரதிவாதி உயிருடன் இருக்கும்வரை தாவா சொத்துக்களில் பாகம் கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இரும்புலிக்குறிச்சி நத்தம் சர்வே எண்.209/3 பூர்வீக சொத்தை 07.12.1998 ல் விற்பனை செய்து தாவா A அயிட்ட சொத்து பிரதிவாதி பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றும் மேற்படி விற்பனை தொகையில் இருந்து கிரையம் பெறப்பட்ட A அயிட்ட சொத்தில் பாகம் கேட்பது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பூர்வீக சொத்தை விற்றும் என் தாயாரின் நகைகளை வைத்தும் தாவா A அயிட்ட சொத்து கிரையம் பெறப்பட்டது என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. என் அம்மா நகையை விற்று கிரையம் வாங்கினார்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எவ்வளவு எடையுள்ள நகைகளை விற்று எவ்வளவு தொகையை வைத்து அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் விற்றார்கள் யாரிடம் விற்றார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மணிமேகலையை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா A அயிட்ட சொத்தில் 260 தேக்குமரம் உள்ளது என்பதற்கு ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா A அயிட்ட சொத்தில் 260 தேக்குமரம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா B அயிட்ட சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி குடிப்பழக்கத்திற்கு ஆளாகி சட்டவிரோதமாக பல பெண்களுடன் பழக்கம் வைத்துள்ளார் என்பதற்கு ஆதாரம் எதுவும் வைத்துள்ளேனா என்றால் இல்லை. தாவா A அயிட்ட சொத்தில் 1 வது

அயிட்ட சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாதியத்தில் கிரையம் பெற்ற சொத்து என்பதாலும் தாவா 2 மற்றும் 3 அயிட்ட சொத்துக்கள் அவருக்கு அசல் வழக்கு எண்.552/1992 என்ற வழக்கில் கிடைத்த தனிப்பட்ட சொத்து என்பதாலும் அதில் எங்களுக்கு பாகம் கோர உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாதவர் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திரு.M.கிறிஸ்டோபர்,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.